Emperor Journal of Classical Tamil Studies
ISSN: 2582-2977
www.ejcts.mayas.info
DOI-http://dx.doi.org/10.35338/EJCTS.2019.1205
© மாயாஸ் பதிப்பகம்
EJCTS
www.ejcts.mayas.info

Volume- I Issue- 1 January - 2022

# அத்தியாயம் - 06

## மருதகாசியின் திரையிசைப் பாடல்களில் சமூக அவலங்கள்

*நெறியாளர் முனைவர் அ.விமலா*
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை,*
*கந்தசாமிக் கண்டர் கல்லூரி,*
*பரமத்தி வேலூர் - 638182, நாமக்கல் (மாவட்டம்).*
*ஆய்வாளா க.கவிதா*
*பகுதிநேர முனைவர்பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை,*
*கந்தசாமிக் கண்டர் கல்லூரி,*
*பரமத்தி வேலூர் - 638182, நாமக்கல் (மாவட்டம்).*

### முன்னுரை

உலக மக்களின் வாழ்வியலை உள்ளது உள்ளபடியே படம் பிடித்துக்காட்டுவது திரைப்படம் எனலாம். ஏதோ ஒரு வகையில் திரைப்படம் பார்ப்போரின் மனதை அத்திரையிசைப் பாடல்கள் கொள்ளை கொண்டு விடுவதுடன் திரும்பத்திரும்ப வாயசைத்து பாடும் படியும் செய்து விடுகின்றன. அவ்வகையில் சமுதாயத்தில் உழைக்கும் ஏழை வர்க்கத்தினருடைய இயல்பு வாழ்க்கையில் அவர்கள் அனுபவிக்கும் அவலங்களை அம்மக்கள் ஆறுதல்கொள்ளும் வகையில் பாடுவதில் தேர்ந்த கவிஞராக விளங்கியவர் மருதகாசி ஆவார். அவரின் பாடல்களில் வழி அறியலாகும் சமூக அவலங்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாக கட்டமைக்கப்பட்டுள்ளது.

### சமுதாயம்

சமுதாயம் என்னும் சொல்லுக்குப் பலர் பல்வேறு கருத்துக்களை முன் வைக்கின்றனர்.

“சமுதாயம் என்பது தன்னுள்ளே ஒரு பேரவைப் போன்ற முறையான உறவுகளைக் கொண்ட ஓர் அமைப்பாகும். அதில் சமூக உறவால் மனிதர்கள் ஒருவருக்கொருவர் இணைந்து வாழமுடியும்” 1

என்று சமுதாயத்தின் இணைப்பினை மெக்கன்ஸி என்பார் கூறுகிறார்.

> “சமூகம் என்பது ஒரு குறிப்பிட்ட நிலப் பகுதியில் நீண்ட காலமாக ஒன்று சேர்ந்து வாழ்வதற்காக மக்கள் ஏற்படுத்திக் கொள்ளும் அமைப்பாகும்”2

என்று கலைக்களஞ்சியம் கூறுகிறது.

> “சமுதாயம் என்பதற்கு மக்களின் திறன், பொருளின் திறன், பொதுவான சபை, பின்னணி”3

என்று தமிழ்ப் பேரகராதி உரைக்கின்றது.

## வறுமை

வறுமை என்பது மிகக் கொடிய நோயாகும். இந்தியாவின் எல்லைகளாக இமயமலையும், வங்கக் கடலும், அரபிக் கடலும், இந்தியப் பெருங்கடலும் என ஈரம் சூழ இருந்தாலும் இந்தியத்தாயின் வயிற்றில் பசி அதனால்தான் ஆறுகள் என்னும் ஈரத்துணியை வயிற்றில் ஈரத் துணியைக் கட்டிக் கொண்டிருக்கிறாள் என்று இந்திய நாட்டின் வறுமையைச் சுட்டுகிறார்.

“வறுமை என்பது ஒரு தனிமனிதனைப் பாதித்து விடக்கூடிய பிரச்சினை அன்று. ஒட்டு மொத்தமான இந்தச் சமூகத்தையே பாதிக்கும் பிரச்சினையாகும். ஏனெனில் சமூகச் சீர்கேடுகளுக்கு மூலகாரணமே வறுமைதான்” 4

## என்ற கூற்று இங்கு ஒப்புநோக்கத்தக்கதாகும்.

மக்களின் முன்னேற்றத்திற்கும், பலவகையான வன்முறைகளுக்கும் பெரும்பகையாக அமைவது இந்தவறுமையே எனலாம். சமுதாய அமைப்பில் வறுமை என்பது பொருளாதாரப் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது என்று இலக்கியம் காட்டுகிறது என்பர்.

“வறுமை என்பது மனித நிலைப்பட்ட வாழ்வுக்கு பொருளியல் தேவையே ஆகும். சமூகத்தின் பெரும்பான்மையான கூட்டத்தினர், நியாயமான செம்மையான வாழ்க்கை நடத்துவதற்கு அத்தியாவசியமானவையெனக் கருதுவன இல்லை எனில் அந்நிலையே வறுமை எனக் கொள்வதுண்டு” 5

என்ற சிவத்தம்பியின் கூற்று இங்கு ஒப்பு நோக்கத்கத்தக்கதாகும். இந்தச் சமுதாயத்தில் அதிகமாகக் காணப்படக் கூடியது வறுமையே எனலாம். மூன்று வேளை உணவுக்காகப் பாடுபடும் ஏழைமக்களும், ஒருவேளை உணவின்றித் தவிக்கும் மனிதர்களும் இச்சமுதாயத்தில் மலிந்துள்ளதைக் காணலாம்.

## மனிதநேயம்

ஒரு படைப்பிற்கான அடிப்படைத் தூண்டுதல்களில் முதன்மையானது மனிதநேயம் ஆகும். ஒரு படைப்பாளியின் படைப்பு முயற்சியில் தன் வாழ்க்கை அனுபவங்கள் சக மனிதனிடத்திலும் வாழ்க்கைபற்றிய தெளிவைத் தரவேண்டும் என்ற எண்ணமே தூண்டுதலாக அமைகிறது. எனவே எந்தவொரு படைப்பாளியிடத்தும் மனிதநேயம் தவிர்க்க முடியாத பண்பாக இருக்கிறது.

"சமூகம் அமைதியாக வாழ்வதற்கும் நல்ல மனநிலையோடு வாழ்க்கையை நடத்துவதற்கும் ஒவ்வொரு தனிமனிதனும் தன்னை நேசிப்பதைப் போல பிறரையும் நேசிப்பதே அடிப்படைக் காரணம் ஆகிறது" 6

என்ற கூற்று இங்கு ஒப்புநோக்கத்தக்கதாகும்.

ஏழ்மையில் வாடுபவனுக்கு இந்தச் சமுதாயம் உணவு தராது. மனிதநேயமற்ற தன்மையை,

"இல்லாத மனு'னுக்கு சோறு தராது - எனலாம்

இருப்பவனை அழைச்சு விருந்துவைக்கத் தவறாது

நல்லவங்க சொல்லுக்கு மதிப்பு தராது - இந்த

நாடறிஞ்ச உண்மையிதை எண்ணிப் பார்க்காது"

(மருதகாசியின் திரையிசைக் பாடல்கள், தொகுதி-1,ப.235)

என்ற பாடலில் எடுத்துரைக்கிறார். இதில் ஏழைக்கு உணவிடாமல் செல்வாந்தனை அழைத்து விருந்து வைப்பது மனித நேயமற்ற செயலாகும் என்பதை அறியமுடிகிறது.

## வஞ்சித்தல்

நம்பினவரை ஏமாற்றுவதும் தன்னுடைய மனச்சாட்சியையே ஏமாற்றுவதற்குச் சமம். ஒரு பொருளைத் தருவதாக வாக்குக் கொடுத்துவிட்டுத் தர மறுப்பதும், ஒருவர்மீது தவறான செய்திகளைப்பற்றி மற்றவர்களுக்குக் கூறுவதும், நம்பிக்கைத் துரோகம் செய்வதும், பிறரை ஏமாற்றுவதும், தான் செய்த குற்றத்தை மற்றவர்கள் மீது போடுவதும் இதுபோன்ற குணம்படைத்த மனிதர்களைச் சமுதாயத்தில் காணலாம்.

"ஒவ்வொரு தனிமனிதனிடமும் பொய்யும் சூதும் தன்முனைப்பும் பிறரை ஏமாற்றிப் பிழைத்துத் தான் உயர்ந்தால் போதும் என்ற நோக்கும் வளரலாயின.

வாழ்வின் எல்லா நிலைகளிலும் வேடமிடும் போக்கும் பொய்யும் வெல்கின்ற அவலநிலை சமூகத்தில் காணப்படுகிறது" 7

என்ற கூற்று இங்கு ஒப்பு நோக்கத்தக்கதாகும்.

பிறரை நம்பவைத்துக் கெடுக்கும் குணம் கொண்ட வஞ்சனையாளர்கள் வாழ்கின்றனர். இதனை,

"உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும்

உலுத்தவர்கள் உலகமடா - வெகு

நல்லதுபோல் நடித்து நம்பவைத்துக் கெடுத்து

செய்திடும் காலமடா"(ம.தி.பா, தொகுதி -1,ப.201) என்றும்,

நேருக்கு நேராய் பேசும் பலர் உண்மையைச் சொல்வதில்லை. கண்ணால் கண்டவற்றை உண்மையென்று நம்பிவிடவும் முடியாது. நல்லவர் போல நடித்து ஏமாற்றுபவர் பலர் உள்ளனர் இதனை,

"வெறும் வே'ம்நீ நம்பாதே

உலகில் எல்லாம்

ஆசை மிகுந்த பணங்

காசை விரும்பி சதி

மோசம் புரிந்து பலர்

ஆடும் நாடகம் வெளிவேசம்" (ம.தி.பா, தொகுதி -2,ப.89)

என்ற பாடல்களில் கவிஞர் வஞ்சித்தல் குணம் பற்றி எடுத்துரைக்கிறார்.

## விதி

மனித வாழ்க்கையில் மனிதனை மீறி நடக்கும் செயல்களை விதி என்று கூறுகின்றனர். ஒருவருடைய வாழ்க்கையைத் தீர்மானிப்பது விதியேயாகும்.

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று

சூழினும் தான்முந்துறும்" 8

"ஊழிவினை உருத்து வந்தூட்டும் என்கிறது" 9

வாழ்க்கை ஒரு சூதாட்டம். வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வரும். விதிப்படியே வாழ்க்கை அமைகிறது. அவ்விதி வலிமை வாய்ந்தது என்பதை,

"எல்லாம் இய்கோர் சூதாட்டம்

இரவும் பகலும் மாறாட்டம

வல்லான் விதியே ஆடுமகன்

வலியில் மனிதர் கருவிகளாம் - என்று

சொன்ன கவியின் திருவாக்கு

உண்மையான உயிர்வாக்கு" (ம.தி.பா, தொகுதி -1,ப.116) என்றும்,

இந்த உடல் பொய்யானது, வெறும்காற்று நிரப்பிய பை என்பதை உணர்ந்து வாழ வேண்டும் என்பதைக் கவிஞர்,

## துன்பம்

ஆசையே துன்பத்திற்கு காரணம் என்கிறார் புத்தர். மனிதன் பேராசை கொண்டு துன்பத்திற்கு ஆளாகின்றான். பெண்ணழகில் மயங்கி துன்பப்படுவதை,

"அழகை உனக்கு கொடுத்த இறைவன்

அறிவில் மயக்கம் கொடுத்து விட்டான்

விழியை எனக்கு கொடுத்த இறைவன்

வழியை காட்ட மறுத்து விட்டான்" (ம.தி.பா, தொகுதி -1,ப.35)

என்ற பாடலிலும்,

பிறந்த காரணம் தெரியாமல் வளரும் முறை தெரியாமல் குறிக்கோளின்றி வாழும் வாழ்க்கையில் துன்பப்படுவதை,

"எங்கு பிறந்தோம் எங்கு வளர்ந்தோம்

என்பது உனக்கும் தெரியவில்லை

எதற்கு பிறந்தோம் எதற்கு வளர்ந்தோம்

என்பது எனக்கும் புரியவில்லை" (ம.தி.பா, தொகுதி -1,ப.35) என்றும்,

காதல் பிரிவுத்துன்பத்தில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடுகிறது என்பதை,

"கண்ணீரூன் வெள்ளம் இங்கு ஓடுதய்யா

கரையோடும் ஆளைக் காண தேடுதய்யா

கருணையுள்ள யாரும் இல்லையா" (ம.தி.பா, தொகுதி -1,ப.51) என்றும் கூறியுள்ளார்.

## தொழில்

தொழில் என்பது ஒருவருடைய வாழ்வாதாரத்திற்கு பொருள் ஈட்டக் கூடிய செயலாகும். ஒருவர் செய்யும் தொழில் அடிப்படையில் அவருடைய சமூகநிலை அமைகிறது. அரசுப்பணி, தனியார் பணி, விவசாயப்பணி, முழுநேரத்தொழில், பகுதிநேரத் தொழில் என பலவகையில் தொழில் அமைகிறது. உழவுத்தொழில் பற்றி

"உழவைப் போற்றி வளர்ப்போம் - சகல

ஊயிர்க்கும் உணவு அளிப்போம்

பஞ்சம் பிணியைத் தொலைப்போம் - சமதர்மம்

பாதை தன்னை வகுப்போம்" (ம.தி.பா, தொகுதி -2,ப.210) என்ற பாடலிலும்,

பூட்டு சரி செய்து கொடுப்பவர்களின் வேலையை,

"பூட்டுக்கு ஏத்த சாவி - நான்

போட்டுத் தருவேன் ராவி" (ம.தி.பா, தொகுதி -ப.65)

என்ற பாடலில் எடுத்துக் கூறுகிறார். மேலும் பூட்டு சவி செய்யும் தொழிலாளியின் வேலைகளாக, சாவியை வெளியில் எடுப்பதும், புதிய சாவியை தயார் செய்து கொடுப்பதும் ஆகும் என்று கூறுகிறார். இதனை,

"மாட்டிக்கிட்டு மக்கர் பண்ணும்

சாவியை வெளியில் எடுப்பேன்

நோட்டம் பாத்து புதிய சாவியை

பூட்டில் போட்டு திறப்பேன்

பாட்டங்காலத்து பூட்டானாலும்

பக்குவமாகப் பிழுப்பேன்

ரேட்டைப் பத்திக் கவலைப்படாம

றிப்பேர் செய்து கொடுப்பேன்" (ம.தி.பா, தொகுதி -2,ப.65) என்று பாடுகிறார்.

## உழைப்பு

வாழ்வில் முன்னேற உழைப்பு அவசியமாகிறது. உழைப்பால் உயர்ந்த உத்தமர்கள் பலர். கடுமையான உழைப்பிற்கு ஈடுஇணை ஏதுமில்லை. திருவள்ளுவர், உழைப்பவர்கள் விதியையும் தூர விரட்டியடித்து விடுவார்கள் என்று கூறுகிறார்.

பாடுபட்டால் பஞ்சம் தீர்ந்து விடும் என்பதை,

"பாடுபட்டாலே பஞ்சப்பேயும் தன்னாலே பறந்துதோடுமே

ஏர்பிடித்தே சேவைசெய்தால் ஏதுபஞ்சமே?

எந்தநாடும் உணவுக்காக நம்மைக் கெஞ்சுமே" (ம.தி.பா, தொகுதி -2,ப.174) என்றும்,

அரசியலில் ஈடுபட்டு கலவரம் செய்யாமல் உண்மையான உடலுழைப்பை மேற்கொண்டால் துன்பம் தீரும் என்பதை,

"சோம்ப லில்லாhமே தினம் பாடுபட்டாலே சுகம் நேருமே

கட்சிபேசி கலகம்செய்து திரிந்திடாமலே

கடமையோடு தொண்டு செய்தால் துன்பம் நீங்குமே" (மேலது,ப.174)

என்ற பாடலில் கவிஞர் உழைப்பின் பெருமைகளைக் கூறியுள்ளார்.

## முடிவுரை

மேற்கண்ட கருத்துக்களின் வாயிலாக கவிஞர் மருதகாசி திரையிசைப் பாடல்களில் அக்காலச் சூழலில் வாழ்ந்த ஏழை மக்களின் வறுமை நிலையினையும், அதேநேரம் ஏழைகள் மனிதநேயத்துடன் வாழும் கட்டமைப்புச் சூழலினையும் படம் பிடித்துக் காட்டியுள்ளார். மேலும், மக்கள், விதியை நினைத்து நொந்து வாழ்வதையும், பிறரால் வஞ்சிக்கப்படுவதையும், துன்பத்தால் துவண்டு விடுவதையும் உழைப்பில் கவனமுடன் இருந்தால் முன்னேற்றம் காணலாம் என்ற விழிப்புணர்வையும், உழைப்பாளிகளை போற்றினால் நாடு வளர்ச்சி காணும் எனும் எதிர்காலச் சிந்தனையையும் தனக்கே உரிய பாணியில் தமது பாடல்களில் பதிவு செய்துள்ள திறத்தை அறிந்து கொள்ளலாம்.

# சான்றெண் விளக்கம்

1.J.S.Meckenzin, Outlines of social philosophy, P.61

2.கலைக்களஞ்சியம், தொகுதி.4

3.தமிழ்ப்பேரகராதி, ப.232

4.இரா.அருள்மணி அறிவழகன், தற்காலத்தமிழ் இலக்கிய கருத்தியல் ஆய்வுக்கோவை, ப.159

5.கா.சிவதம்பி, தற்காலத்தமிழ் இலக்கியத்தில் வறுமையும் சாதியும், ப.685

6.மா.நடராசன் பிரதீபா, இராசகோபாலன் புனைக்கதை இலக்கியம் ஓர் ஆய்வு,ப.36

7.சு.வேங்கடராமன்,சிறுகதைக் கலைஞன் ஜெயகாந்தன், ப.59

8.கம்பனில் தத்துவம், ப.235

9.சிலப்பதிகார ஆராய்ச்சி, ப.117